RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s1013

OPEN ACCESS

# ஆண்டாள் பிரியதர்ஷினி படைப்புகளில் அடித்தள சமூக பெண்களின் நிலை

ஆ. ஜாய்ஸ்ஜெய ரூபி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620022, தமிழ்நாடு, இந்தியா

# Andal Priyadarshini's the Position of Women in the Working Class

A. Joyce Jaya Ruby [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Tiruchirappalli–620022, Tamil Nadu, India

* Corresponding Author: joyce20evan@gmail.com

Received: 07-09-2021
Revised: 31-05-2022
Accepted: 05-06-2022
Published: 12-08-2022

Check for updates

## ABSTRACT

Singing songs about God, the king, and upper castes are mostly found in Tamil literature. The singing of working class people is rarely found in a few pieces of literature like Pallu (Agriculture Songs) and Kuravanchi. Modern literature gives complete freedom to sing about the working class. In it, Andal Priyadarshini has created modern literature such as poetry, short stories, novels, etc. In it, the creators have made the lower class people aware of their life status by singing and creating characters. Her works frequently depict hustlers, roadside dwellers, scavengers, cremators, and transgender women and girls. They are the members of society. Some are working people, who have every right to live here, and are economically backward. People have continued their lives at the bottom of society for centuries. Mere pity for the working class will not lift them up. If individual value, castelessness, labour value, and non-discrimination come together, then a society called the working class will disappear.

**Keywords:** Grassroots Social Women, Caste, Tamil Literature, Andal Priyadarshini

## முன்னுரை

சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை இலக்கியத்தை ஆண்ட பெண்பாற் புலவர்கள் பலர். ஔவை, நச்செள்ளை, ஆண்டாள், காரைக்கால் என்ற வரிசையில் ஆண்டாள் பிரியதர்ஷினியும் இணைகிறார். இவருடைய படைப்புகளில் அடித்தள மக்களின் பதிவுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலக்கியங்களில் அடித்தள மக்கள் குறித்தான பதிவு எல்லாக் காலத்திலும் அரிதாகவே இருந்து வந்தன. தற்கால இலக்கியங்கள் அக்குறையைக் களைந்தன எனலாம். மக்கள்தொகையில் பெரும்பான்மையினரான அடித்தள மக்கள் பற்றி, இன்று பல்வேறு படைப்பாளர்களும் பேசி, எழுதிவருகின்றனர். அவர்களுள் ஆண்டாள் பிரியதர்ஷினியும் ஒருவர். அடித்தள மக்கள் யார் என்பதற்கு, அடித்தளமக்கள் வரலாறு, "இந்தியச்சூழலில் அடித்தள மக்கள் என்பதற்குச் சாதி, செய்யும் தொழில், அரசியல் ஆதிக்கம், பாலியல் நிலை, பொருளாதார நிலை, ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் அல்லது அனைத்து நிலையிலும் தாழ்ந்திருக்கும் மக்கள் என ஓர் எளிய வரையறை செய்யலாம்" என்கிறார் (Sivasubramanian, 2002). இவ்வரையறையைக் கொண்டு ஆண்டாளின் படைப்புகளில் பதிவு செய்யப்பட்டு மனதில் நிலைத்து நிற்கும் சிலரை வரிசைப்படுத்தலாம். விலைமகளிர், சாலையோரம்

வசிப்போர், தூய்மைப் பணி செய்வோர், பிணம் எரிக்கும் தொழில் செய்வோர், மூன்றாம் பாலினத்தவர், பெண்கள், குழந்தைகள், பிச்சைக்காரர்கள்.

## விலைமகளிர்

பொதுமகளிர், பரத்தையர் என்று அழைக்கப்பட்ட ஒரு சமூகத்தினர் பொருள் பெற்று ஆண்களின் காமவேட்கையைத் தணிப்பவர் ஆயினர். இவர்கள் கூலியாகப் பொருளைப் பெற்றாலும் அவை ஊதியமாகக் கருதப்படவில்லை. வஞ்சித்து பொருள் பெறுபவர்களாகவே சமூகம் இவர்களைக் கருதியது. இன்றைய சமூகம் இவர்களை விலைமகளிர், விபச்சாரி என்ற சொற்களால் சுட்டுகிறது. இந்தியாவில் விபச்சாரம் சட்டப்படி குற்றம் இல்லை. ஆனால் அத்தொழில் செய்யும் பெண் சமூகக் குற்றவாளியாகப் பார்க்கப்படுகிறாள். அவளின் மனதில் எழும் நிராசை, துன்பம், மெல்லிய உணர்வுகள், சமூக வெறுப்பு போன்றவற்றை ஆண்டாள் பிரியதர்ஷினி "மன்மத எந்திரம்" என்ற கவிதைத் தொகுப்பில் பதிவுசெய்துள்ளார். குடும்பச்சூழல் காரணமாகப் பெண்கள் இப்பணிக்குள் நுழைகின்றனர். பின்பும் அந்நிலையே பலருக்குத் தொடர்கதையாகி விடுகிறது.

"ஒருநாள் தினவு உனக்கு ஒருநாள் உணவு எனக்கு" என்று உணவுக்கும், (Andal Priyadarshini, 2006)

"தொட்டிலில் போட்டு வந்தேன் காய்ச்சல் மகளை மூன்று முடிந்தது/

மருந்து சீட்டு/மடியில் கசகசக்க"

என்று குழந்தை மருந்துக்கும் வழியின்றி வாழ்கின்றனர் (Andal Priyadarshini, 2006).

"அணைய மறுக்கிறதே பசி நெருப்பு/கடைசி நெருப்பு வரை"

என்ற வரிகள் கூறுவதைப் போலப் பலரது வாழ்க்கை, கடைசி வரை வறுமையாகவே தொடர்கிறது (Andal Priyadarshini, 2013).

## சாலையோரம் வசிப்போர்

சுதந்திரம் பெற்று ஒரு நூற்றாண்டு கழிந்தும் வீடற்றோர் அதிகம் வசிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்குகிறது. பேருந்து, தொடர்வண்டி நிலையங்கள், நடைபாதைகள், கோயில்கள் போன்ற இடங்களில் ஏராளமானோர் சாலையில் வசிப்பவராக உள்ளனர். பெண்களும் குழந்தைகளும் கூட இதில் அடங்குவர். இந்தியாவில் "17.7 லட்சம் இந்தியர்கள் வீடற்றவர்கள்" என்று தேசிய புள்ளி விவரம் தெரிவிக்கிறது (18/5/2020 கூகுள் இந்தியா ஸ்பெண்ட்) பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலை சமூகத்தில் மதிப்பின்மை ஆகியவற்றைக் கடந்து பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி, பாதுகாப்பின்மை அவர்களது குழந்தைகள் திருடப்படும் நிலையும் தொடர்கிறது. அவர்கள் சாலையில் தூங்கும்போது செல்லும் வாகனங்களில் நசுங்கி இறந்தவர்களும் உண்டு. வீடுகள் இல்லாததால் ஓட்டுரிமை அற்றவர்களாக மட்டுமின்றி நாட்டின் குடிமகன் என்ற அடையாளம் இன்றியே வாழ்க்கையை வாழுகின்றனர். இவ்வளவு துன்பங்களுக்கு மத்தியிலும் காதலும், தாய்மையும் இழையோடுவதைக் கவிஞர் படம் பிடித்துக்காட்டுகிறார்.

"அழுக்கின் பிறப்பிடம்

இழுக்கின் இருப்பிடம்

தூசியும் வியர்வையும்

அவளின் இருப்பிடம்

ஆனாலும் கூட

அவளே உலக அழகி

புருஷனுக்கு,

தாய்மை கொஞ்சுகிறது

அவள் முகத்தில்

குழந்தையைக்

கொஞ்சும் போது

பவுடர் வாசத்தை விட அழகு

அவள் வாசமும்; தாய்மைவாசமும்"

என்று அக்கவிதை நீள்கிறது (Andal Priyadarshini, 2010). சாலையோரம் வசிக்கும் மனிதர்களிடம் நேயத்தைச் செலுத்துவோம். அவர்களின் உணர்வுகளையும் மதிப்போம் என்று கற்றுக் கொடுக்கிறது இக்கவிதை.

## தூய்மைப் பணி செய்வோர்

தூய்மைப்பணி என்பது சமூகத்தின் அழுக்கைத் துடைக்கும் தாய்மைப் பணி ஆகும். தாய்மையைப் போல் அவர்களும் கொண்டாடப்பட வேண்டியவர்கள். ஆனால் இந்தியச் சமூகம் அவர்களைக் கடைசி நிலையில் வைத்துள்ளது. மேட்டிமைக்குடி மக்களின் கழிவினை அகற்றும் பணியினைக் குறிப்பிட்ட சமூகத்தினர் மேற்கொண்டு வந்துள்ளனர். நவீன கழிவறை வந்த பின்னும் பல்வேறு முறைகளில் தொடர்ந்து அவர்களே அப்பணியைச் செய்து வருகின்றனர். அதிலிருந்து அவர்கள் விடுபட நினைத்தும் முடியாமல் தவிப்பவர் பலர். தகழியின் 'தோட்டியின்மகன்' மலர்வதியின் 'தூப்புக்காரி' போன்ற புதினங்கள் இவர்களது துயர வாழ்வைச் சித்தரிப்பவை ஆகும். ஆண்டாள் பிரியதர்ஷினி 'கழிவு' என்ற சிறுகதையில் 'சோமையா' என்ற பாத்திரம் வழி அவர்களின் துயர வாழ்வை எடுத்துரைக்கிறார். அதில் "மழை பெஞ்சாத்தான் நகரம் அள்ளறப்ப மழைத் தண்ணியும் சேர்ந்து வளியும். கூடைய தூக்கி போறப்ப மூஞ்சி முகரை எல்லாம் வலியும் தேச்சித் தேச்சிக் குளித்தாலும் தேங்கா நாறு தான் தேயும்" என்று 'சோமையா' தன் மனவலியைக் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது (Andal Priyadarshini, 2009). மனைவியும், குழந்தையும் அவரை விட்டுப் பிரிவதற்கு இத்தொழிலே காரணம் எனவும் மருவுகிறார். சோமையாவின் மகள் தந்தையை வெறுப்பதற்கும் ஒரு வகையில் தந்தையின் தொழிலே காரணமாகிறது. தொலைக்காட்சி தொடர் ஒன்றில் தான் படிக்கும் கல்லூரியிலேயே தூய்மைப்பணி செய்யும் தந்தையை 'அப்பா' என்று அழைக்க மறுக்கும் பாத்திரம் ஒன்று காட்டப்படுகிறது. இதனைப் போலப் பல மகன்கள் உண்மையிலும் உள்ளனர்.

## பிணம் எரிப்போர்

பிணம் எரிக்கும் தொழிலைச் செய்பவரை 'வெட்டியான்' என்று அழைக்கின்றனர். இவர்கள் பிணக்குழி தோண்டுதல், பிணம் சுடுதல், ஊர்காவல் போன்ற பணிகளைச் செய்து வந்தனர். இவர்களின் வீடு சுடுகாட்டிலேயே அமைந்திருக்கும். அங்கிருக்கும் சுடலை மாடன் கோவில் கூட அவர்களது வீடாக இருக்கும். வெட்டியான் என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி "ஓர் வகை கிராம ஊழியக்காரன்" எனப் பொருள் கூறுகிறது (விக்கிபீடியா). 'ஞான வெட்டியான்' என்றொரு நூலும் தமிழில் உண்டு. குறளின் கருத்துக்களை அதிகம் கொண்ட இந்நூலை எழுதியவர் பெயரும் வள்ளுவன் ஆகும். சித்தர்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் இந்நூல் உயர்வகுப்பினரை நோக்கிக் கூறுவது போலப் பாடப்பட்டுள்ளது. எனவே நெடுங்காலமாகவே இவர்கள் அடித்தட்டு மக்களாகவே வாழ்ந்து வருகின்றனர். இவர்களது வாழ்வை விவரிக்கும் புதினமாக ஆண்டாளின் 'தகனம் அமைந்துள்ளது. இருசப்பன், சின்னராசு, சின்னப்பொண்ணு போன்ற பாத்திரங்களைக்கொண்டு ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் கூட இப்பணியில் இருப்பதைச் சுட்டுகிறார். பிணத்தோடு வரும் வாய்க்கரிசிக்காகக் காத்திருக்கின்றனர் அதனைப் போன்று உடுத்துவதற்கு மாற்றுத் துணியின்றி வாழ்கின்றனர். "இந்த வேட்டியைப் பாரு மாத்து வேட்டியே இல்லாமக் கட்டிக் கிழிஞ்சு போச்சு.... வயசை மறந்து கெஞ்சினார் தாத்தா. கட்டியிருந்த வேட்டியைக் கழற்றி உதறினார். உள்ளிருந்த கோவணம் நார்நாராய்க் கிழித்து இருந்தது.

கோவணம் மேல் துண்டு தாத்தா உடம்பு எல்லாமே நாற்றம். கற்றாழை நாற்றம்" என்று தகனம் நாவலில் சுட்டிக்காட்டுகிறார் தனித்து வாழ்வது, வறுமையின் பிடியிலிருப்பது, நாற்றத்திற்குள்ளே உழல்வது என்று பலவகைகளில் துன்புறுகின்றனர் (Andal Priyadarshini, 2009). மின் எரியூட்டும் சாதனமும் வளர்ச்சியும் வந்த பின்பும் ஒரு சமூகத்தினர் அடித்தட்டு மக்களாகவே தொடர்கிறார்கள்.

## மூன்றாம் பாலினத்தவர்

திருநங்கையர் என அழைக்கப்படும் மூன்றாம் பாலினத்தவர் சமூகத்திற்குப் புதியவர்கள் அன்று. இதனைக் காலம் காலமாக மனிதர் வயிற்றிலும் மனிதரில் ஒருவராகவும் பிறந்து மனிதர்களோடு வாழ்பவர்கள். ஆனால் மனிதச் சமூகத்தால் மதிப்புடன் ஏற்றுக்கொள்ளப்படாதவர்கள். வசதியான வீட்டில் பிறந்தாலும் பெற்றோர்களாலும் சமூகத்தாலும் அடித்தளத்திற்குத் தள்ளப்படுபவார்கள். பொருளுக்காகப் பிச்சை எடுப்பதும் பாலியல் தொழில் செய்வதும் இவர்களின் அடையாளமாக ஆக்கப்பட்டது.

"கைதட்டிப்

பிச்சை கேட்கிறேன் நான்

இச்சை கேட்கிறாய் நீ"

என்னும் கவிதை இதனை அடையாளப்படுத்துகிறது இவ்விரு தொழில்களிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு இன்று பலர் முன்னேறி வருகின்றனர் (Andal Priyadarshini, 2010). அதற்கான முயற்சியில் இன்று பல்வேறு இடர்களைச் சந்திக்க நேரிடுகிறது. அதில் திருநங்கைகளுக்கு வாடகை வீடு தர மறுப்பதும் ஒன்று. எனவே கவிஞர்

"தரமறுப்பதேன்

வாடகை வீடு

நீ வசிப்பதும்

வாடகை வீடு தானே

சாஸ்வதமா'

உன் உடம்பு"

என்று வினாத் தொடுக்கிறார் (Andal Priyadarshini, 2010). திருநங்கைகளின் வலி, துன்பம், அவமானம், தவிப்பு போன்றவற்றை "நானும் இன்னொரு நானும்" எனும் கவிதைத் தொகுப்பில் பதிவு செய்துள்ளார்.

"வேண்டும்

இடஒதுக்கீடு

வேண்டாம்

சமூகஒதுக்கீடு"

என்று கல்வி, வேலை ஆகியவற்றில் அவர்களுக்கான இட ஒதுக்கீடு என்பது சமூக ஒதுக்கீடிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் என்பது தற்போது நிறைவேறி வருகிறது. பலதுறைகளில் இன்று அவர்கள் முன்னேறி வருவது கண்கூடு.

## பெண்கள், பெண்குழந்தைகள்

பாலியல் நிலையில் பெண்களும் பெண் குழந்தைகளும் அடித்தள மக்களாகக் கருதப்படுகின்றனர். விதவையராக, பூக்காத மகளிராக, விலைமகளிராக, குடும்பமகளிராக,

இல்லத்திலும், வேலைக்குச் செல்லும் இடங்களிலும் பல துன்பங்களை அடைவதையும் ஆண்டாள் பல்வேறு படைப்புகளில் பதிவு செய்கிறார். தண்ணீர்க்காரி, கூலிக்காரி, கீரைக்காரி, தொகுப்பாளினி, கோலப்பொடிக்காரி, பூக்காரி என்ற பல்வேறு பணிகளைச்செய்து இவர்கள் அடித்தள பெண்களின் மனதையும் துயரங்களையும், மென்மையான மனத்தையும், கதைகளிலும் கவிதைகளிலும் வரும் பதிவு செய்கிறார் 'வலி' என்ற சிறுகதையில் வீட்டு ஓட்டுநராலேயே பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டு வலியால் துடிக்கும் குழந்தையின் துயரத்தையும் அதனைக் கண்டு துடிக்கும் தாத்தாவின் துயரத்தையும் பதிவு செய்துள்ளார்.

## முடிவுரை

ஆண்டாள் பிரியதர்ஷினி படைப்புகளில் வரும் மாந்தர்கள் பலர் அடித்தள மக்களாவர். அவற்றின் பெரும்பான்மையினர் பெண்கள் அடித்தள சமூகத்தினர் அனைத்து நிலையிலும் பெண்கள் கூடுதலாக அவதியுறுகின்றனர். தொழிலால் விலைமகளிரும், தூய்மைப் பணி செய்வோரும், வெட்டியான் என்ற சமூகத்தினரும், மதிப்பு குறைவாக மட்டுமின்றி பொருளாதாரத்திலும் வறுமைக்கோட்டிற்குக் கீழேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். மூன்றாம் பாலினத்தவர் பெற்றோராலும், சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்படாததால் அவர்களும் அடித்தளத்திற்குத் தள்ளப்படுகின்றனர். தனிமனித மதிப்பும், சாதியற்ற நிலையும், அனைத்து தொழிலாளர்களுக்கான மதிப்பும் பாகுபாடு இன்மையும் ஒன்றிணைந்து நிகழும் பொழுது அடித்தள மக்கள் என்றொரு சமூகம் ஒழியும்.

## References

Andal Priyadarshini, (2013) Kadavulin Kadaisi Naal, Kumaran Pathippagam, Chennai, India.

Andal Priyadarshini, (2006) Manmadha Enthiram, Kumaran Pathippagam, Chennai, India.

Andal Priyadarshini, (2009) Andal Priyadarshini Sirukathaigal, Yegam Pathippagam, Chennai, India.

Andal Priyadarshini, (2010) Innoru Naan, Kumaran Pathippagam, Chennai, India.

Sivasubramanian, A., (2002) Adithala Makkal Varalaru, Makkal Veliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License